**வணக்கம்**

**ஆகாஷ்வாணி-புதுச்சேரி**

**மாநிலச் செய்திகள்**

**வாசிப்பவர் : மலர்விழி**

**தேதி 21.03.2025 நேரம் மாலை 6.10 மணி**

---

*தலைப்புச் செய்திகள்*

இந்தியாவின் **நிலக்கரி உற்பத்தி**, 1 பில்லியன் டன் என்னும் அளவைத் தாண்டி, புதிய மைல் கல் எட்டப் பட்டுள்ளதை, பிரதமர் திரு. நரேந்திர மோடி பாராட்டி உள்ளார்.

தீவிரவாதத்தை கொஞ்சம் கூட சகித்துக் கொள்ள முடியாத கொள்கை ஒன்றை, அரசு பின்பற்றி வருவதாக, **மத்திய உள்துறை அமைச்சர்** திரு. அமித் ஷா தெரிவித்துள்ளார்.

**காடுகளும்- உணவுப் பாதுகாப்பும்** என்ற கருப்பொருள் அடிப்படையில், **சர்வதேச வனவள தினம்** இன்று கடைபிடிக்கப்படுகிறது.

விபத்தில் படுகாயம் அடைபவர்களுக்கு, **3 லட்சம் ரூபாய் நிதி உதவி** வழங்கப்படும் என, புதுச்சேரி முதலமைச்சர் திரு. ரங்கசாமி இன்று சட்டமன்றத்தில் அறிவித்துள்ளார்.

------------------------

*மோடி நிலக்கரி* (17)

இந்தியாவின் நிலக்கரி உற்பத்தி, 1 பில்லியன் டன் என்னும் அளவைத் தாண்டி, புதிய மைல் கல் எட்டப் பட்டுள்ளதை, பிரதமர் திரு. நரேந்திர மோடி பாராட்டி உள்ளார். இது குறிப்பிடத் தகுந்த சாதனை என்றும், எரிசக்தி பாதுகாப்பு, பொளாதார வளர்ச்சி மற்றும் சுயசார்பில், நாட்டிற்குள்ள உறுதிப்பாட்டை பிரதிபலிக்கும் வகையில் இந்த சாதனை அமைந்து இருப்பதாகவும், சமூக ஊடகப் பதிவு ஒன்றில் பிரதமர் கூறியுள்ளார். நிலக்கரி துறையுடன் சம்பந்தப்பட்ட அனைத்துத் தரப்பினரின் அர்ப்பணிப்பும், கடும் உழைப்புமே, இந்த சாதனைக்கு காரணம் என்றும் அவர் தெரவித்துள்ளார்.

நவீன தொழில்நுட்பங்கள் மற்றும் திறம்பட்ட நடைமுறைகள் மூலம், இந்தியா, நிலக்கரி உற்பத்தியை அதிகரித்து இருப்பதுடன், சுரங்கப் பணிகள், பொறுப்பான முறையில், நீடித்த அடிப்படையில், மேற்கொள்ளப் படுவதையும் உறுதிப்படுத்தி இருப்பதாக, மத்திய நிலக்கரி மற்றும் சுரங்கத் துறை அமைச்சர் திரு. கிஷன் ரெட்டி கூறியுள்ளார். இந்த சாதனையால், நாட்டின் பெருகி வரும் மின்சாரத் தேவைகளை பூர்த்தி செய்யவும், பொருளாதார வளர்ச்சியை தூண்டி, பிராசமான எதிர்காலத்தை மக்களுக்குவழங்கவும் ஏதுவாகும் என்று அவர் தெரிவித்துள்ளார்.

------------------------

*அமித் ஷா* (18)

பிரதமர் திரு. நரேந்திர மோடி தலைமையிலான அரசு, தீவிரவாதத்தை கொஞ்சம் கூட சகித்துக் கொள்ள முடியாத கொள்கை ஒன்றை கடைபிடித்து வருவதாக, மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா தெரிவித்துள்ளார். இன்று மாநிலங்களவையில், உள்துறை அமைச்சகத்தின் செயல்பாடுகள் பற்றிய விவாதங்களுக்கு பதில் அளித்த அவர், அரசு கடந்த 10 ஆண்டுகளில், அரசியல் மன உறுதி மற்றும் தொழில்நுட்பங்களின் பயன்பாடு மூலம், நாட்டின் பாதுகாப்பை வலுப்படுத்தி இருப்பதாக கூறினார்.

நாட்டின் வளர்ச்சிக்கு தடையாக இருந்த, ஜம்மு-காஷ்மீர் தீவிரவாதம், வடகிழக்கு வன்முறைகள், மற்றும், இடதுசாரி தீவிரவாதத்தை, அரசு திறம்பட்ட முறையில் கட்டுப்படுத்தி இருப்பதாக திரு. அமித் ஷா தெரிவித்தார். ஜம்மு-காஷ்மீரில், தீவிரவாதத்தால் ஏற்படும் மரணங்களின் எண்ணிக்கை 70 சதவிகிதம் குறைந்து இருப்பதாகவும், தீவிரவாத சம்பவங்களின் எண்ணிக்கை, கணிசமாக வீழ்ச்சி அடைந்துள்ளதாகவும் அவர் கூறினார். ஜம்மு-காஷ்மீரில், 370ஆவது அரசியல் சாசனப் பிரிவை நீக்கியதன் மூலம், நமது அரசியல் சாசன சிற்பிகளின், **ஒரே அரசியல் சாசனம்-ஒரே கொடி** என்னும் கனவை, அரசு நனவாக்கி இருப்பதாக, மத்திய உள்துறை அமைச்சர் மேலும் குறிப்பிட்டார்.

-----------------------

*வன வள தினம்* 1 (4)

வளமான காடுகளுக்கும், உலக அளவிலான உணவுப் பாதுகாப்பிற்கும் இடையிலான தொடர்புகளை வலியுறுத்தும் வகையில், **காடுகளும்- உணவுப் பாதுகாப்பும்** என்ற கருப்பொருள் அடிப்படையில், சர்வதேச வனவள தினம் இன்று கடைபிடிக்கப்படுகிறது. இதுகுறித்து ஒரு செய்தித் தொகுப்பு....

**(வாய்ஸ்)**

*வன வள தினம் 2 (20)* (வாய்ஸ்)

மக்களின் வாழ்வாதார, மற்றும் ஊட்டச் சத்துத் தேவைகளை பூர்த்தி செய்வதில் முக்கிய பங்காற்றி வரும் காடுகள், உயிரி பன்முகத் தன்மையின் அடித்தளமாகவும் திகழ்கின்றன. இந்தியாவை பொருத்தவரை, பொருளாதாரம் மற்றும் கலாச்சாரத்தின் உயிர் நாடியாகவும் திகழும் வன வளத்தை பாதுகாக்க, முக்கிய கவனம் செலுத்தப்படுகிறது. வனவளப் பாதுகாப்புப் பணிகளில், புரட்சிகரமான பல்வேறு கொள்கைகள் மற்றும் முன் முயற்சிகளை, அரசு அமல்படுத்தி உள்ளது. அரசின் **தேசிய வேளாண் காடுகள் கொள்கை**யின் கீழ், மரக்கன்று வளர்ப்பு மற்றும் ஆராய்ச்சிப் பணிகளுக்கு, நிதி உதவி வழங்கப்படுகிறது. நாட்டின் வனப் பரப்பை 5 மில்லியன் ஹெக்டேராக உயர்த்தும் நோக்கத்துடன் **பசுமை இந்தியா** இயக்கம், செயல்படுத்தப் படுகிறது. வனவளம் மூலமான வருவாயை அடிப்படையாக கொண்ட குடும்பங்களாக, 3 கோடி குடும்பங்களை மேம்படுத்த, இத்திட்டத்தில் முக்கியத்துவம் அளிக்கப் படுகிறது. மத்திய அரசின் **வன்-தன் யோஜனா** திட்டம், வனப் பரப்பின்

விரிவாக்கத்தில், உள்ளூர் சமூகத்தினரின் பங்கேற்பை ஊக்குவிப்பதில், முக்கிய பங்காற்றி வருகிறது. இத்தகைய முன் முயற்சிகள் மூலம், கடந்த 10 ஆண்டுகளில் இந்தியாவின் மொத்த வனப் பரப்பு, 2.38 சதவிகிதம் அதிகரித்து இருப்பதாக, **வன வள நிலவரங்கள் பற்றிய தேசிய அறிக்கை** மூலம் தெரியவந்துள்ளது. இதே கால கட்டத்தில், **காட்டுத் தீ** சம்பவங்களின் எண்ணிக்கை கணிசமாக குறைந்து இருப்பதும் குறிப்பிடத்தக்கது.

------------------------

*உயிரி தொழில்நுட்பம்* (15)

இந்தியாவில் சுமார் 10 ஆயிரம் ஸ்டார்ட்-அப் நிறுவனங்கள், **உயிரி தொழில்நுட்பத்** துறையில் ஈடுபட்டுள்ளதாகவும், உயிரிப் பொருளாதாரத்தில் இந்நிறுவனங்களின் பங்களிப்பு, சுமார் 165 பில்லியன் டாலராக மதிப்பிடப் பட்டுள்ளதாகவும், மத்திய அறிவியல்-தொழில்நுட்பத் துறை இணை அமைச்சர் டாக்டர் ஜிதேந்திர சிங் தெரிவித்துள்ளார். இன்று புதுடெல்லியில், **உயிரி தொழில்நுட்பத் துறைக்கான ஆராய்ச்சி நிதிஉதவி அமைப்**பின் 13ஆவது நிறுவன நாள் விழாவில் உரையாற்றிய அவர், விண்வெளி மற்றும் உயிரி தொழில்நுட்பத் துறையில், குறிப்பிடத்தகுந்த முன்னேற்றதுடன், இந்தியா, உலக அளவில் அங்கீகாரம் பெற்று வருவதாக கூறினார். **இந்தியா உயிரி பொருளாதார அறிக்கை** என்னும் ஆவணத்தை, அமைச்சர் இந்நிகழ்ச்சியின் போது வெளியிட்டார். இந்திய பயோ-டெக் நிறுவனங்களுக்கு, உலக அளவில் நிதி மற்றும் இதர உதவிகளை பெற்றுத் தரும் வகையில் அமைந்துள்ள இந்த அறிக்கையில், உலக அளவிலான முதலீட்டாளர்களுக்குத் தேவையான எல்லா விவரங்களும் இடம்பெற்றுள்ளன.

------------------------

*ரங்கசாமி நிதி* (8)

விபத்தில் படுகாயம் அடைபவர்களுக்கு, உடனடியாக ஒன்றரை லட்சம் ருபாய் வழங்குவதற்கான பிரதமரின் திட்டத்துடன் சேர்த்து, புதுச்சேரி அரசு மேலும் ஒன்றரை லட்சம் ரூபாய் வழங்கும் என, முதலமைச்சர் திரு. ரங்கசாமி அறிவித்துள்ளார். தலை அல்லது முதுகு தண்டில் அடிபட்டால், புதுச்சேரியில் சிகிச்சை பெற முடியாமல் சென்னையில் ஒருவாரம் மருத்துவமனையில் தங்கி, சிகிச்சை பெற கூடுதல் செலவு ஏற்படுவதை கருத்தில் கொண்டு, புதுச்சேரி அரசு, கூடுதல் நிதி வழங்க முடிவு செய்து இருப்பதாக, முதலமைச்சர் இன்று சட்டப் பேரவையில் அறிவித்தார்.

------------------------

*கழிவுநீர் இயந்திரம்* (15)

புதுச்சேரியில் கழிவுநீர் தொட்டிகள் மற்றும் குழாய்களை, திறம்பட்ட முறையில் தூர்வார ஏதுவாக, மத்திய அரசின் **ஜெம்** இணைய தளம் மூலமாக குறைந்தபட்ச ஒப்பந்தப் புள்ளி அடிப்படையில், மாநில அரசால் கொள்முதல் செய்யப் பட்டுள்ள 6

**கழிவுநீர் பராமரிப்பு இயந்திர**ங்களை, முதலமைச்சர் திரு. ரங்கசாமி இன்று, பொது மக்களின் பயன்பாட்டிற்கு அர்ப்பணித்தார். சட்டப் பேரவை எதிரே நடைபெற்ற இந்நிகழ்ச்சியில், சட்டப் பேரவைத் தலைவர் திரு. ஆர். செல்வம், பொதுப் பணித் துறை அமைச்சர் திரு. லட்சுமி நாராயணன், சட்டமன்ற உறுப்பினர் திரு. பிரகாஷ் குமார் மற்றும் உயர்நிலை அதிகாரிகள் கலந்து கொண்டனர். மத்திய அரசு நிறுவனமான **தூய்மை பணியாளர் நிதி மற்றும் மேம்பாட்டுக் கழக**த்தின், 3 கோடியே 21 லட்சத்து 49 ஆயிரம் ரூபாய் கடன் உதவியுடன் கூடிய இத்திட்டத்தின் கீழ், எஞ்சி உள்ள இயந்திரங்கள், **இணைய வழி ஒப்பந்தப் புள்ளி** மூலம் வாங்கப்படும் என்றும், கடன் தொகையை, புதுச்சேரி அரசு, 7 சதவிகித வட்டியுடன், அதிகபட்சம் 7 ஆண்டுகளில் திருப்பி செலுத்தும் என்றும், அரசு செய்திக் குறிப்பு ஒன்றில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

------------------------

*ஏனாம்* (8)

ஏனாமில், கனக்காலபேட்டா பகுதியில் உள்ள குப்பை கிடங்கில், குப்பைகளைக் கொட்டக் கூடாது என அப்பகுதி மக்கள் எதிர்ப்பு தெரிவித்ததை தொடர்ந்து, மாற்று இடம் தேர்ந்தெடுக்கப் படாமல், நகரப் பகுதியில் துப்புரவு நிலவரம் மோசமாகி வருவதை, அரசின் கவனத்திற்கு கொண்டு வரும் வகையில், அஇஅதிமுக-வின் ஏனாம் பிரிவினர், இன்று ஏனாமில், **அமைதி வழி கடையடைப்பு போராட்டம்** நடத்தினர். ஏனாம் வர்த்தக சங்கத்தின் ஆதரவுடன் இந்த கடையடைப்பு நடைபெற்றதாக, எமது ஏனாம் நிருபர் தெரிவிக்கிறார்.

------------------------

*மறு சீரமைப்பு* (8)

நியாயமான தொகுதி மறுசீரமைப்பு என்பது குறித்து, திமுக தலைவரும், தமிழக முதலமைச்சருமான திரு. மு.க. ஸ்டாலின் தலைமையில், சென்னையில் நாளை நடைபெற உள்ள முதலாவது கூட்டத்தில், ஆந்திரா, கேரளா, கர்நாடகா, தெலங்கானா, மேற்குவங்கம் மற்றும் ஒடிசாவில் இருந்து, பல்வேறு அரசியல் கட்சித் தலைவர்கள் மற்றும் பிரதிநிதிகள் பங்கேற்க உள்ளனர். கூட்டாட்சி தத்துவம் மற்றும் தொகுதி மறுசீரமைப்பு தொடர்பான பல்வேறு பிரச்சனைகள் குறித்து, இந்த முதல் சுற்று ஆலோசனைகளில் விவாதிக்கப்படும்.

------------------------

*பாலிடெக்னிக்-விளையாட்டு* (10)

தமிழ்நாடு மற்றும் புதுச்சேரி மாநில அளவிலான, பாலிடெக்னிக் கல்லூரிகளுக்கு இடையிலான விளையாட்டுப் போட்டிகள், சிதம்பரம் அண்ணாமலைப் பல்கலைக் கழக விளையாட்டு மைதானத்தில் நடைபெற்று வருகின்றன. பாலிடெக்னிக் கல்லூரிகளுக்கு இடையிலான விளையாட்டு சங்கத்தின் தலைவரும், வலங்கைமான் அரசு பாலிடெக்னிக் கல்லூரி முதல்வருமான திரு. ஜான் லூயிஸ் தலைமையில் நேற்று நடைபெற்ற தொடக்க விழாவில், அண்ணாமலை பல்கலைக்கழகப் பதிவாளர் டாக்டர் பிரகாஷ், இந்த 3 நாள் விளையாட்டுப் போட்டிகளை தொடக்கி வைத்தார்.

பல்கலைக்கழக உடற்பயிற்சித் துறையின் தலைவர் பேராசிரியர் ராஜசேகரன் உள்ளிட்டோர் நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர்.

------------------------

*காமன் வெல்த்* (12)

2030ஆம் ஆண்டு **காமன் வெல்த் விளையாட்டுப் போட்டி**களை, குஜராத் மாநிலம் அகமதாபாத்தில் நடத்த விரும்பம் வெளியிட்டு, இந்தியா, அதிகாரப்பூர்வமாக விண்ணப்பித்துள்ளது. விண்ணப்பம் பெறப்பட்டதை **காமன் வெல்த் விளையாட்டுக் கூட்டமைப்பு**, உறுதிப்படுத்தி இருப்பதாக, **இந்திய காமன்வெல்த் விளையாட்டு சங்க**த்தின் தலைவர் **பி.டி உஷா** தெரிவித்துள்ளார். 2023ஆம் ஆண்டு உலகக் கோப்பைக்கான **ஐசிசி ஆடவர் கிரிக்கெட் போட்டித் தொடரின் இறுதிப் போட்டி**, அகமதாபாத்தில் நடைபெற்றதை அவர் சுட்டிக் காட்டி, பெரிய அளவிலான விளையாட்டுப் போட்டிகளை நடத்துவதில், அகமதாபாத் நகருக்குள்ள நிர்வாகத் திறன்களுக்கு, இதுவே சான்றாகும் என்றார். **2036ஆம் ஆண்டு ஒலிம்பிக்ஸ்** உள்ளிட்ட சர்வதேச போட்டிகளை இந்தியாவில் நடத்துவதற்கான அனுமதியைப் பெற, இந்தியா ஏற்கனவே முயன்று வருவதும் குறிப்பிடத்தக்கது.

------------------------

*ஜல் சக்தி அபியான்* (11)

மத்திய அரசின் ஜல் சக்தி அபியான் மூலமான, 6ஆம் கட்ட, மழை **நீர்ப்பிடிப்பு இயக்கம்**, தேசிய அளவில் நாளை தொடக்கப்பட உள்ளது. ஹரியானா மாநிலம் பஞ்ச்குலாவில் நாளை நடைபெற உள்ள தொடக்க விழாவில், மத்திய ஜல் சக்தி அமைச்சர் திரு. சி.ஆர் பாட்டீல், சிறப்பு விருந்தினராக கலந்து கொள்கிறார். ஹரியானா முதலமைச்சர் திரு. நயாப் சிங் சைனி, மாநில நீர்ப்பாசனத் துறை அமைச்சர் திருமதி சுருதி சௌத்ரி உள்ளிட்டவர்களும் நிகழ்ச்சியில் பங்கேற்கிறார்கள். பிரதமர் திரு, நரேந்திர மோடியின் தொலைநோக்குத் தலைமையின் கீழ், 2019ஆம் ஆண்டு, தொடக்கி வைக்கப்பட்ட ஜல் சக்தி இயக்கம், மழை நீர் சேமிப்பு, மழை நீரின் மறு பயன்பாடு மற்றும் நீர் நிலைகளை புத்தாக்கம் செய்வதில் முக்கிய பங்காற்றி வருவதும் குறிப்பிடத்தக்கது.

------------------------

*ஆர்.எஸ்.எஸ் (16)*

ஆர்.எஸ்.எஸ் அமைப்பின் உயர்நிலை கொள்கை வகுப்புக் குழுவான, அகில இந்திய பிரதிநிதிகள் சபைக் கூட்டத்தை, ஆர்.எஸ்.எஸ் தலைவர் டாக்டர் மோகன் பகவத், பொது செயலர் திரு. தத்தாத்ரேயா ஹொசபளே ஆகியோர், பெங்களூரில் இன்று தொடக்கி வைத்தனர்.

இந்த 3 நாள் கூட்டத்தில், ஆர்.எஸ்.எஸ் அமைப்பின் ஓராண்டு செயல்பாடுகள் மறு ஆய்வு செய்யப்பட்டு, எதிர்கால செயல் திட்டங்கள், இறுதி செய்யப்படும் என்று, ஆர்.எஸ்.எஸ் துணை பொதுச் செயலர் திரு. முகுந்தாஜி, பின்னர் செய்தியாளர்களிடம்

தெரிவித்தார். இவ்வாண்டு ஆர்.எஸ்.எஸ் அமைப்பின் நூற்றாண்டை ஒட்டி ஏற்பாடு செய்யப் பட்டுள்ள பல்வேறு செயல்பாடுகள் குறித்து இக்கூட்டத்தில் விவாதிக்கப்படும் என அவர் கூறினார்.

நாட்டில் ஆர்எஸ்எஸ் கிளைகளின் எண்ணிக்கை, நகர்ப்புறங்களில் 10 ஆயிரமாகவும், கிராமப் புறங்களில் 3 ஆயிரமாகவும், அதிகரித்து இருப்பதாக,திரு. முகுந்தாஜி தெரிவித்தார். நாடு முழுவதும், 40 ஆயிரம் கல்வி நிறுவனங்கள், 17 ஆயிரம் மருத்துவமனைகள் உட்பட, சுமார் 90 ஆயிரம் **சமூக சேவை செயல்பாடு**களில், ஆர்எஸ்எஸ் அமைப்பினர் ஈடுபட்டுள்ளதாக அவர் மேலும் கூறினார்.

------------------------

*மீண்டும் தலைப்புச் செய்திகள்*

இந்தியாவின் **நிலக்கரி உற்பத்தி**, 1 பில்லியன் டன் என்னும் அளவைத் தாண்டி, புதிய மைல் கல் எட்டப் பட்டுள்ளதை, பிரதமர் திரு. நரேந்திர மோடி பாராட்டி உள்ளார்.

தீவிரவாதத்தை கொஞ்சம் கூட சகித்துக் கொள்ள முடியாத கொள்கை ஒன்றை, அரசு பின்பற்றி வருவதாக, **மத்திய உள்துறை அமைச்சர்** திரு. அமித் ஷா தெரிவித்துள்ளார்.

**காடுகளும்- உணவுப் பாதுகாப்பும்** என்ற கருப்பொருள் அடிப்படையில், **சர்வதேச வனவள தினம்** இன்று கடைபிடிக்கப்படுகிறது.

விபத்தில் படுகாயம் அடைபவர்களுக்கு, **3 லட்சம் ரூபாய் நிதி உதவி** வழங்கப்படும் என, புதுச்சேரி முதலமைச்சர் திரு. ரங்கசாமி இன்று சட்டமன்றத்தில் அறிவித்துள்ளார்.